## தமிழ்நாட்டில் – அத்தியாவசிய பொருட்களான

# காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை தாறுமாறாக உயர்வு!

## பொதுமக்கள் கடும் அதிர்ச்சி – கண்டுகொள்ளாமல் குறட்டை விடும் த.வெ.க. அரசு!

**சென்னை, ஆக.28–**

**அத்தியாவசிய பொருட்களின் விலை தாறுமாறாக உயர்ந்து வரும் நிலையில், காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை கிடுகிடுவென உயர்ந்து இல்லத்தரசிகளை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.**

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட போர் உள்ளிட்ட காரணங் களால் கடந்த சில மாதங்களாக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் டீக்கடைகள் ஓட்டல் களில் உணவுகளின் விலை உயர்வு மக்களை வாட்டி வதைத்து வந்தது. கடைகளில் சாப்பிட முடியாத அளவுக்கு ஏற்பட்ட விலை உயர்வு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது இதிலிருந்தே மக்கள் மீள முடியாத நிலையில், தற்போது தமிழ்நாட்டில் விலைவாசி உயர்வு என்பது பேசும் பொருளாக மாறி வருகிறது.




**விலைவாசி உயர்வு - மக்கள் அதிர்ச்சி!**

தமிழ்நாட்டில் தற்போது த.வெ.க. அரசு பொறுப்பேற்று ஆட்சி நடை பெற்று கொண்டிருக்கிறது இந்த சூழ்நிலையில்தான் தற்போது விலைவாசி உயர்வு என்பது பேசுபொருளாக மாறியிருக்கிறது. எங்கு திரும்பினாலும் மக்கள் விலைவாசி உயர்வு குறித்து புலம்பிக் கொண்டிருக்கின்றனர். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தள்ளுவண்டிக் கடைகளில் ஒரு இட்லியின் விலை ரூ.7 ஆக இருந்தது. இப்போது அது ரூ.10. டீயின் விலை ரூ.10 ஆக இருந்தது. இப்போது ரூ.12. சென்னை–திருநெல்வேலி தனியார் பேருந்து கட்டணம் ரூ.700 ஆக இருந்தது. இப்போது ரூ.1500 என தாறுமா றாக உயர்ந்து வருவது மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

அதாவது, பெட்ரோல், டீசல், காஸ் சிலிண்டர். சமையல் எண்ணெய், காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை என அத்தியாவசிய பொருட்களின் இந்த கடுமையான விலை உயர்வு என்பது மக்களை பெரிதும் பாதித்து வருகிறது. விலைவாசி உயர்வு வெவ்வேறு காரணங்களால் ஏற்படுவதுண்டு. பயிர்விளைச்சல் பாதிக்கப்படும்போது அந்தக் குறிப்பிட்ட பயிருக்கான விலை உயரும். அதன் உற்பத்தி அதிகரிக்கும் போது. விலை தானாகவே குறைந்துவிடும்.

ஆனால், இதுபோன்ற காரணங்களால் ஏற்படுகின்ற சில விலை உயர்வு நிரந்தரமாக மாறிவிடும். உதாரணத்திற்கு கடைகளில் நாம் அருந்தும் டீயை குறிப்பிடலாம். டீ தூள், சர்க்கரை, பால் விலை உயரும் போது டீ விலையை உயர்த்துவார்கள். ஆனால் மீண்டும் அந்த பொருட்களின் விலை குறைந்தாலும் டீயின் விலை குறையாது. இது தான் நம் நாட்டின் நிலை. அந்த வகையில் தற்போது வேகமாக உயர்த்தப்பட்டு வரும் காய்கறி, அரிசி, சர்க்கரை, பருப்பு, எண்ணெய் விலை உயர்வானது தமிழக மக்கள் மத்தியில் இடியாய் இறங்கி வருகிறது.

**எவ்வித நடவடிக்கையும் எடுக்காத த.வெ.க. அரசு!**

இதை கட்டுப்படுத்த கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசியல் தலைவர்கள் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால் இவ்வளவு மோசமான நிலமைக்கு தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையிலும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்தோ, அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்தோ த.வெ.க. அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது தமிழக மக்கள் மத்தியில் கடும் ஆட்சியாளர்கள் மீது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாகவே பல்வேறு சமையல் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. முதலில் அரிசி விலை கணிசமாக உயர்ந்த நிலையில், பிறகு சர்க்கரை - விலை உயர்ந்தது. அதைத்தொடர்ந்து இப்போது சமையலுக்கு அத்தியாவசியமாக இருக்கும் வெங்காயத்தின் விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது

அத்தியாவசிய தேவையாக உள்ள சர்க்கரையின் விலை வழக்கமாக ஒரு கிலோ ரூ.40 முதல் அதிக பட்சமாக ரூ.45 வரை விற்பனையாகி வந்தது. ஆனால், தற்போது கடந்த 20 நாட்களில் பல மடங்கு விலை உயர்ந்து, கிலோவுக்கு ரூ.25 வரை அதிகரித்துள்ளது. தற்போது ஒருகிலோ சர்க்கரை ரூ.70 முதல் ரூ.80 வரை விற் பனை செய்யப்படுகிறது.

**வெங்காய தட்டுப்பாடு!**

சர்க்கரை விலை உயர்வால் பொதுமக்கள் மற்றும் டீக்கடை நடத்துவோர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே சிலிண்டர் விலை உயர்வு, பால் விலை உயர்வு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வரும் தாங்கள், தற்போது சக்கரை விலை உயர்வால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வேதனை தெரிவித்துள்ளனர்.

இது ஒருபுறம் இருக்க, மறுபுறம் மீண்டும் வெங்காய தட்டுப்பாடு இல்லத்தரசிகளை வாட்டி வதைக்க தொடங்கியுள்ளது. இந்தியாவில் பருவமழை தாமதம், சில முதன்மை உற்பத்திப் பகுதிகளில் குறைந்த மழைப் பொழிவு காரணமாக வெங் காயச் சாகுபடி கடுமையாகப் பாதிக் கப்பட்டுள்ளது. அதன் விளைவாக டெல்லி, தமிழகம், கேரளா, அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் வெங்காயத்தின் சில்லறை விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு இன்று 45 லாரிகளில் மட்டுமே வெங்காயம் விற்பனைக்கு வந்துள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு மொத்த விற்பனையில் ஒரு கிலோ ரூ.35-க்கு விற்கப்பட்ட நாசிக் வெங்காயம், தற்போது கிலோவுக்கு ரூ.20 வரை அதிகரித்து ஒரு கிலோ ரூ55-க்கு விற்கப்படுகிறது. வெளிமார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில் வெங்காயத்தின் விலை ஒரு கிலோ ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதேபோல் சின்ன வெங்காயம் விலையும் ஏறுமுகத்திலேயே இருந்து வருகிறது. மொத்த விற்பனையில் ரகத்தை பொறுத்து ஒரு கிலோ ரூ.80 வரையிலும், வெளிமார்க்கெட்டில் உள்ள கடைகளில் ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.110 வரையிலும் விற்பனை ஆகி வருகிறது. தினசரி சமையலுக்கு பயன்படுத்தப்படும் பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது இல்லத்தரசிகளிடையே கவலையை ஏற்படுத்தி உள்ளது.

**காய்கறிகள் விலை - இல்லத்தரசிகள் கவலை!**

அதுமட்டுமல்ல மற்ற காய்கறிகளின் விலையும் தாறுமாறாக உயர்ந்து வருவதால் மக்கள் புலம்பத் தொடங்கியுள்ளனர். நாட்டு தக்காளி ரூ.20 முதல் ரூ.25 வரை, நவீன் தக்காளி ரூ.40, உருளை கிழங்கு ரூ.15 - ரூ.35, கேரட் ரூ.50 ரூ.70, பீன்ஸ் ரூ.60 - ரூ.80, பீட்ரூட் ரூ.50 - ரூ.60, முட்டைகோஸ் ரூ.20–ரூ.25, வெண்டைக்காய் மற்றும் வரி கத்திரிக்காய் ரூ.25 –ரூ.30, நாட்டு கத்திரிக்காய் ரூ.30 - ரூ.40, பாகற்காய் ரூ.40 - ரூ.50, புடலங்காய் ரூ.20ரூ.30, சுரக்காய் ரூ.15- ரூ.25, முருங்கைக்காய் ரூ.25 ரூ.30, சேனைக்கிழங்கு ரூ.30 - ரூ.40, பச்சமிளகாய் ரூ.50 - ரூ.60, இஞ்சி ரூ.90- ரூ.180, பூண்டு ரூ.130- ரூ.240 என காய்கறிகள் விலை விண்ணைத் தொடும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

**அரிசி, மளிகைப் பொருட்கள்!**

கடந்த சில வாரங்களாகவே அரிசி, மளிகைபொருட்களின் விலை திடீரென அதிகரித்து, பல்வேறு தரப்புகளில் இருந்து குரல்கள் எழுந்து வருகின்றன. குறிப்பாக கடந்த சில வாரங்களாக அரிசி மற்றும் மளிகைப் பொருட்களின் விலை கிலோவுக்கு ரூ. 20 முதல் ரூ.30 வரை கிடுகிடுவென உயர்ந்திருப்பது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உற்பத்தி குறைவு, பிற மாநிலங்களில் இருந்து வரத்து பாதிப்பு மற்றும் பதுக்கல் போன்ற காரணங்களால் நடுத்தரக் குடும்பங்களின் மாதாந்திரச் செலவு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ரூ.1,400க்கு விற்பனையான 25 கிலோ மூட்டை அரிசி இன்று ரூ.1,700 முதல் ரூ.1,800 வரை விற்பனையாகிறது. அடுத்தடுத்த வாரங்களில் இது மேலும் அதிகரிக்கும் என அரிசி வணிகர்கள் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் பருவத்துக்கு ஏற்ப விலையில் ஏற்ற இறக்கம் இருக்கும் என்றாலும் தற்போது உள்ள அளவுக்கான விலை உயர்வு இருந்ததில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

**எண்ணெய் - சர்க்கரை விலை உயர்வு!**

அதேபோன்று, எண்ணெய் விலை ஜூலை மாதத்தில் 5% முதல் 6% வரை உயர்ந்துள்ளது. சென்னை யில் இதன் சில்லறை விற்பனை விலை தோராயமாக ஒரு லிட்டர் ரூ.140 முதல் ரூ.175 வரை உள்ளது. பாமாயில் 1 லிட்டருக்கு தோராயமாக ரூ.90 முதல் ரூ.140 வரையிலும் பிராண்டுகளுக்கு ஏற்ப விற்கப்படுகிறது. அரிசி விலை உயர்ந்த நிலையில் தற்போது எண்ணெய் மற்றும் மளிகை பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால், பொது மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர். மேலும், அடுத்தடுத்த பண்டிகைகள் நெருங்கி வரும் சூழலில், அத்தியாவசியப் பொருட்களின் விலை, குறிப்பாக சர்க்கரையின் விலை 50% வரையிலும், அரிசியின் விலை 40% வரையிலும், எண்ணெயின் விலை 60% வரையிலும் உயர்ந்திருப்பதால் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களின் அன்றாடச் செலவுகள் அதிகரித்துள்ளதோடு, அவர்களின் பண்டிகைக் காலக் கொண்டாட்டங்களையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே, த.வெ.க. அரசு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தேவையான ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதோடு, விலை குறையும் வரை நியாயவிலைக்கடைகளில் வழங்கப்படும் அரிசி, பருப்பு, சர்க்கரை, எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் அளவை தேவைக்கேற்ப உயர்த்தி வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ கம் முழுவதும் மக்களின் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

**எந்த நடவடிக்கையும் எடுக்காத முதல்வர்!**

விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட குடும்ப தலைவர்கள் கூறியதாவது: –

தமிழ்நாட்டில் தற்போது விலைவாசி உயர்வு என்பது மக்கள் மேல் விழுந்த இடியாக பார்க்கிறோம். காய்கறிகள், அரிசி, எண்ணெய், பருப்பு, சர்க்கரை என ஒட்டு மொத்த அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இதனுடைய பாதிப்பு இல்லத்தரசிகளுக்குத் தான் தெரியும். குறிப்பாக கடந்த சில வாரங்களாக அரிசி மற்றும் மளிகைப் பொருட்களின் விலை கிலோவுக்கு ரூ.20 முதல் ரூ.30 வரை கிடுகிடுவென உயர்ந்திருப்பது பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. த.வெ.க. அரசு இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் தூங்கிக் கொண்டிருக்கிறது.

## த.வெ.க. ஆட்சியில்


## விண்ணைத் தொடும் விலைவாசி!

### தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!






திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தின் வேர்களைத் தேடி என்ற தலைப்பில், கழகத்தின் ஆணிவேராகத் திகழும் கிளைக் கழக நிர்வாகிகளை சந்திக்கும் நிகழ்வின் தொடர்ச்சியாக ஆர்.கே.பேட்டை தெற்கு ஒன்றியம் எரும்பி கிளைக் கழக நிர்வாகிகளை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், சந்தித்து உரையாடினார் உடன் ஒன்றிய செயலாளர்கள் பெ.பழனி, கே.ராஜேந்திரன், எரும்பி கிளைச் செயலாளர்கள் பெருமாள், குணா, கார்த்திக், குமார், வெங்கடேஷ், முரளி, மாதவன், வேலு, விநாயகம், வேணு, ரமேஷ், இளங்கோவன், மார்லின், பழனி, நிலமேகம், கோபி, பாலபுரம் மணி, அன்பு, ரஞ்சித் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருவள்ளூர் மாவட்ட செய்தியாளர் சங்கத்தின் சார்பில் முன்னாள் ராணுவ படை வீரர்களுக்கான கொடி நாள் நிதியை மாவட்ட ஆட்சியர் ச.கவிதாவிடம் வழங்கி செய்தியாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர். இதில் சங்கத்தின் தலைவர் எம்.அருள் பிரேம் தாஸ், பொதுச் செயலாளர் என். உதயகுமார், பொருளாளர் வெங்கடேஸ்வர்லு, ஒருங்கிணைப்பாளர் முரசொலி ஆர்.அண்ணாதுரை, நிர்வாகிகள் சீனிவாசன், சுதாகர், எழில், எம்.ஏ.கருணாநிதி, பாண்டியன், யுவராஜ், இளங்கோவன், விநாயகமூர்த்தி, ரமேஷ், லோகநாதன், நரேஷ், சந்திரசேகர், நவீன் உள்ளிட்ட நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.